SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

உ. புத் சஞ்சிகை ௰அ] ௲அ௱சஉ ௵ புரட்டாதி. ௰௫, தேயதி வியாழக்கிழமை, Thursday, Sept. 15, 1842 [Vol. II. No. 18

(Reply to an article on Tamil Grammar in No 17)

பரமபதிதுணை.

இலக்கணவுரையாணி

சோதிமண்டலஞ்சூழ்-நீதிமணடலமெஙகும் உதயதாரகைவி
டுத்துவிருள்புலாத்துந் தெள்ளியபுலவிர்காள்

ஆறனுருபு மேற்கும்மவ்வுருபே-என்னுஞ்சூத்திரத்தினுரைகளைக்குறித்து யானகாட்டிய நியாயங்களையுஞ் சிறப்புடைத்தெனத் தெரிந்துகொணட வுரையினமேற்கோட்டிய வுதாரணஙகளையும விளக்கங்களையும்இவர்நேசரென்பவர்நேரலாமையாலெலாமலரலாயமாய் மேலட்டினர் மேலாடியும திருத்துமுரையெனபதிற் பேசிய பிரகாரம சாத்தனதுகுறிப்பு வினையாவதெப்படியெனபதையும் எழுவாயுருபு உருபுகளை ஏற்குமென உருபுருபேற்குமென்று கூறுதல பொருந்துவதெப்படியென்பதையும பிறவிகுககளையும குறித்து விடைகள் பெருகவாருக வீறுகொடுகூறுது போயினா ஆயினும பலபடிவாயுலர நடவினா.

தேசிகரவாகளுரையிற் புரைகாட்டியவா சோடசவாதக் கருப்பொருளாவது கற்றுராசருக்கத் தருக்கவிதியாவது பெறறுராவெனறா. ஆ¹ யானகற்றனாலும் பெற்றநாலுமாராய இவரெனன, என்னுடைய உபாத்தியாரா,அலலது மேலவிசாரணைககாரரா?இவருககு யான கணக்குக் கொடுககவேண்டுமா. இது எனனஅப்பா இவையெலலாமறியாதிலககணவானந்தரியத்தின் சமவாதத்திற்கு வரலாமா எனறார் அப்படி ஒரு பிரமாணமுண்டா இவரைபபோலமுறறக்கற்றவாபிழைபடடுபபோகவுமசொற்பக்கலவிமான அதைககணடு திருத்திவிடவுமசமபவிககொணடுதா.ஆரிடத்தடஙகிற்றம்மாவாண்மைககுமவதியுணடோ-எனபதை அறியாரபோலுமகுறித்தவிசிர்தத்திலமேற காட்டபபடுந நியாயம மாத்திரம பொருநதியிருக்கவண்டுமேயன்றி வேறென்ன, சாத்திரசித்தமினறி எழுதித்தரலாமாவெனறா தொல்காபபியம பிறிது பிறிதேற்றலு-மெனனுஞ்சூத்திரமுந தொனனூல அதனுடைமமுதலாறுமேறகும-எனனுஞ்சூத்திரமும் ஆறனுருபும பெயர்த்தனமையா யுருபுகளையேறகுமெனகை சரியெனபதற்குச் சாத்திரசித்தமெனறு காட்டினேன அபபடியிருககச் சாத்திரசித்தமினறி எழுதினேனெனறு முழுமோசஞ் சொலலலாமா, கொழுககளபோலற வழுக்கள் பொறித்தாரே எனறா. யானகாட்டிய நியாயஙகள் இவா புலனுககு வழுககள்போலவிப் பினபு உழவுககு வேணடியதாயிருககுங கொழுககளுமாபோலாயின இது பெரிய ஆச்சரியம், கூறியதுகூறலெனனுங குற்றங் குறித்தாரேஎனறா சுபாவமான பெயாவேற்றுமைகளேற்பது ஏற்குமே-மைஎனனுஞ் சூத்திரத்திற் கூறியிருபபத்திருமபவும ஆறனுருபும எனபதிலும சுபாவமான பெயருருபேற்குமெனறு சொலவது கூறியதுகூறலெனனுங் குற்றம பொருநதாமற்போக ஆறுமவேற்றுமைககுரியாய் நிற்கும் அது எனபதும சுபாவமான பெயாபோல ஏகதேசத்தி னுருபேற்குமெனறு சொலவது கூறியது கூறலென்னுங குற்றமெனபது பொருந்துமா, இது சபையிலேறியுந் திருநதுமா, சிவஞானதேசிகருரை திருததியனமையுந் திறமிலலமையுஞ் சொலலநாவும புறப்பட்டதா, சொனனவருரை சிரியோரக்குத் திறப்பட்டதா என்றார். ஆம சிவஞான தேசிகரவாகளுமவிசாகப்பெருமாளையரவாகளும மகாகவாநிபுணாகளும எமமனோரெலலாம வணஙகபபடும மகத்துக்களுமானதினால எனபோலிகள் அவாகளுடன விரோதப்பது குணமனறு ஆயினும் அவாகளுடைய திருவடிகளை என சிரசினமேற் சூடிப் பிழைபொறுத்தருளவேணடுமெனற விண்ணப்பத்துடனே தொலகாப்பியமுனிவரா திருவாக்குச்சூத்திரம வீரமாமுனிவருடைய தொனனூற்சூத்திரம முதலானவற்றிற் கியையவும் நறசாடசிககுத் திருத்தியுமாயிருபபதினால ஆறனு-வே-எனபதறகு-ஆறனுருபும(பெயாத்தனமையாய) உருபுகளேற்குமெனறுமுரை மற்றையுரையிற் றிறமென்பதற்கு இவா கோபிபபானேன அவர்கள் மகிமையையறியாதவனபோற்பாவிப்பானேன். சஙகரநமசிவாயப்புலவா,ஆற பே எனபதற்கு எயதாததெய்துவித்தலென்று கருத்துரைபணணியிருப்பதினும் இறந்ததுதழீஇயவிழிபு சிறப்புமமையாற் பெயர்களுருபேற்றுவருவனபோ லிவ்வுருபுருபேற்றுப்பபின்றுவருவதன்றெனபதினுலும் அவர் தாமும் ஆறனுருபுருபுகளேற்குமென்பதை மறுத்திருக்கிறாரெனறார் ஆ¹ இவர் அவருடைய கருத்து விளங்கிக்கொண்டது நன்றாயிருக்கினறது, ஏற்கு-மை என்பதில தன்னிலைப் பெயர்வேற்றுமை யேற்குமெனறு முடிப்புக்கட்டி ஆண்டெடுத்துக்கூறாத ஆறனுருபும் ஏகதேசத்திற் பெயர்த்தன்மையாயுருபுகளை யேற்குமெனறீண்டுக்கூறினதால் எய்தாததெய்துவித்தலென்று சொல்லியிருப்பதற்கு நிகழாதது நிகழ்த்தலென்றும் இவவழக்குப் பெருகவழங்காமல அருக வழங்குமெனனுங் குறிப்பின்மேற் பயின்றுவருவதன்றென்பதற்கு அத்தியந்தாபாவமென்பதாய்க் கூறினரெனறும விளஙகிக் கொண்டாரபோலும் இப்படி இவர் முழுத்தப்பாய்பபொருள்விளங்கிக்கொண்டதுமனறி விளஙகிககொண்டபடியாவது சூத்திரவுரையை அங்கிகரித்துக்கொள்ளவுமில்லை. இது புலமைக்குத் தப்பா அனைவர்க்குமொப்பா இவ்வுரைமேல் வெப்பா அது பெருமெய்ப்பா, உருபுருபேற்குமென்று சொல்லுதலாகிய பிழைபடடு ஒருவாற்றானுந் திறமெனறு சொலலபபடாமற் போயவிட்டாரெனறு பொயசொல்லலாமா எனறா ௰௨, ௰௫, ௰௭. சஞ்சிகைகளில ஆறனுருபுருபுகளை யேற்குமெனறஙகிகரித்தவாகளிருவருரையில ஒருவருரையை ஒருவாற்றாற்றிறமெனறும ஒருவருரையை அபபடிச்சொலலாமற் றவறெனறுஞ் சொலலியிருககவிலலையாவெனபதைப்பார்த்தால இவரோ யானோ பொய்சொன்னதெனபது தெரியபபடும் குறித்தவுரைகளில இம்முறையாவிது திறம அம்முறையாலது திறமெனறுவது கொண்டாரிலலையெனறு அபராதஞ்சொனனா. அபபடிக் கொண்டிருககவில்லையாவென்பதைச் சமஙிலப பிரபுக்கள் பாாத்துணமைசொலலுங்கள் ஆனால, சஙகரநமசிவாயபபுலவரவர்களுரை அதிக திறமெனறு மாத்திரஞ் சொனனேன அதை முனனுந் தாரணபபடுததினேன இன்னும பூரணப்படுத்துவேன், தொன்னூல் அத-ம் இதன் கருத்துரை விகற்பமெனறிருப்பதைத் தேர்ந்திலாரபோலுமெனறார் மேற்கூறிய தனனிலைப்பெயரயனறி ஆறனுருபு முருபுகளை யேற்குமெனபதினால இணடுவிகற்பமெனபது மேற்கூறிய நியதிககு வேற்றுத்தனமையடுத்த ஓர்விதியெனறு குருகடாடசத்தினால விளஙககொணடேன. இவா ஏதும விபரீதமாய விளஙகிககொணடிருபபதற்கு ஆா பாடு ஒருவாற்றுறதிறமெனறு சொலலவந்த விசேஷம யாது எழுவாயவிளியிரணடையுமவிலககிககொணட விசேஷந்தானோவெனவினவினா. வேற்றுமை ஐமமுதல எனபதனுரை பாாககடடும ஐயநீக்-டடுமெனறா, வேற்று-ரேழே எனனுஞ்சூ-ம வேற்றுமைபபுணர்ச்சி அலவழிப்புணர்ச்சிகளில வேற்றுமைப்புணாசசிபுறவுருபாகிய ஐம்முதலிய ஆறும பொருந்திப் புணரும புணாச்சியெனறு வரையறுத்து ஆணடைககோட்பாடடினபடி கூறிவைத்தாா இணடு ஏற்குமெவவகைப் பெயாக்குமீறுயப் பொருள் வேற்றுமை செயவனவெட்டைவேற்றுமை எனவும் பெயரே ஐ ஆல கு இன அது கண விளி யெனறுகு மவற்றினபெயா முறையெனவுமமுன கூறிப் பின ஆறனுருபு மேற்குமவவுருபே எனக கூறியிருககச்செயதே அத்தொகைககும இத்தொகைககும அவ்விதிக்கும இவவிதிக்குஞ் சமபநதமெனன, இபபடிககுழப்பி மயககுவது செப்படிவித்தையினாலெயாகிறதுபோலிருககினறது. வேறதுமொருவாறிருந்துபணணிற்றேவெனறா ஆம அகத்தியம் குவலயாநந்தம முதலிய இருநதுபணணினவெனறு சில சூத்திரங்காட்டினா. அச்சூத்திரஙகளில அவரவா கோடயாட்டினபடி கொள்ளும வேற்றுமைகளினறெலைக் கூறியிருககிறதேயன்றி ஆறனுருபுருபுகளையேலாதெனறுவது அலலது ஏற்குமெனறுஞும எட்டையுமேலாது ஆறையுமாத்திரமேற்குமெனறுவது கூறியிருக்கவிலலை யானவினவியவினாவிற்கு அவை உதாரணமாய்க்காட்டியது வட்டுக்கோட்டைக்கு வழி யாதெனபாாருககுக் கொட்டைபபாக்கைஞ்ஞூறு எனறுற்போலும், ஆற-பெ-எனபதற்குச் சங்கரநமச்சிவாயப்புலவருமஎடடுருபுகளையுமேற்குமெனறு சொலலவிலலையென்றும எய்தாததெயதுவித்தலெனறதிற்கு மாத்திரமென்றுஞ் சூதபபொயசொனனா. எடடுருபுகளையுமேறகுமென்று அவா சொலலியிருப

பது அவருடையவுரையை எடுத்துவாசித்தால் வெளியரங்கமாயா வராலுங் காணக்கூடும் அன்றியும் தமிழ்ப்புலவரெனப் பிரசித்த நாமம்பெற்ற வேதகிரிமுதலியாரும் தியாகராயா அப்படிவரைந்து விளச்செய்தபொழுது தவறென்றுசொல்லாமலுரைக்கருத்தை மாத்திரம் மறுத்திருக்கிறார், இனி எய்தாத தெய்துவித்தலென்னுங் கருத்துரை இதற்குப்போலினும் பலவற்றிற்குப் பண்ணியிருப்பது வெளியாக்குவேன உயிரீற்றுப்புணரியல, ௰௫, ௰௮, ௰௬, உ௰ம் சூத்திரங்களுக்கும் இன்னும் இவ்வியலிலும் மற்றையியல்களிலும் பல சூத்திரங்களுக்கும் சங்கரநமச்சிவாயப்புலவரவர்கள் மாத்திரமன்று விசாகப்பெருமாளையரவர்களும் ஒருபடியாயக்கருத்துரை பண்ணியிருக்கிறார்கள் ஆ! இப்படி வெளியரங்கமாயிருப்பவற்றையும் மறுத்துப் புரட்டியடிப்பது கற்றுணர்ந்தோர்க்குத் தருமமா எமமேலவருமமா செய்யுங்கருமமா மெய்யின பருமமா, அரியவிதி அருகலகடையேயென விருக்கிறதென்று காட்டினா அதற்குக் கருத்து அருகவழங்குவது கடைத்தரமென்று கொள்ளவேண்டியதன்றி அவ்வழக்குரைக்கும் விதியும் உரையுந் தள்ளப்போடவும் வேண்டுமா, பெரும்பான்மையுரையைக் குறைவுரையாகவும் சிறுபான்மையுரையை நிறைவுரையாகவும் எஞ்சுகருவெனு மலங்காரமாகவுங் கொண்டாரென்றார் யானல்ல அவர்தான நிறைவுரையைக் குறைவுரையாகவும எஞ்சுகருவெனு மலங்காரமாகவும கொண்டவதென்பதை முடிப்பிற்காட்டுவேன. தொல்காப்பியவுரைக்கருத்தும பிரிந்ததா என்றார் இவருக்கெல்லாம பிரியுமா உலகத்திலெல்லாருங் கிஞ்சிற்கிஞர்களாயிருக்க இவரொருவா சருவஞ்ஞத்துவம பெற்றிருக்கிறாரா, தொல்காப்பியம பிறிதுபிறிதேற்றலுமெனபதற்குப பெயர்க்குப பிறிதாகிய உருபுருபேற்குமெனபதன்றி வேறியாதுகருத்து, சருவஞ்ஞத்துவம பெற்றவர்களென்றெண்ணுகிறவர்களுக்கு எப்படிவிளங்குமோ தெரிந்திலேன், எல்லையின்னுமதுவும்—என்னுஞ் சூ—ம விடைவழுவாகக்கொடுத்தாரென்றா அதினுரையில அதுவென்பது எழுவாயாய்ப் பெயரேற்குமெனபதினு அருபேரகும பொழுது இடைச்சொன்மையாயன்று பெயர்ச்சொன்மையாயததானேறகுமெனபது அவருடைய கருத்து எனபது தெரிவிக்குமபடி எழுதினேன அதை விடைவழுவெனபதென மயக்கமசெயகெனுருமையும எ॰ற சூ—ம உரைந்ததுதெளிவுள்ள புத்தியென றறிவிக்கத் தாரேவென்றா யானது எழுதினது அதற்காகவல்ல உருபுருபேற்குமென்றும உருபே பெயருமாயேற்குமென்னும பொருண்மேவிலக்கணையாய அப்படிக் கூறினாரெனபது திட்டபட ஒரு ஒப்புநிலை திட்டாந்தமாயெழுதினேன இவரோவென்னில அப்படியல்லக்குறிததகாரியத்திற்குச் சம்பந்தமில்லாத அநேக சூத்திரங்களைக் கலவிப்பெருக்கங்காட்டுமபடி சுமமா எழுதியிருக்கிறா வினையிடையுரி உருபேலாது என்றுகூறிச் சில சூத்திரங்களுமேனுகாட்டினா வினைமுதலிய மூன்றும வேற்றுமைகொள்ளாதெனச் சங்கரநமச்சிவாயப்புலவருஞ்சொல்லவில்லையா உருபுருபேற்குமபொழுதுபெயர்ச்சொன்னீர்மையாய நின்றேற்குமென்றும விளக்கியிருக்கவில்லையா சிறீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருச்சூத்திரங் காட்டினா அதை என் சிரசில்மேல வைத்துக்கொணடேன. அதிலே நாயனா ஆறுமவேற்றுமையுருபுகளிலொன்றைப் பேசினாரேயன்றி ஆறனுருபு உருபேற்குமேவாதென்றொன்றும பேசவில்லையே, ஆறனுருபு உருபேற்குமென்றால அது உருபேற்பதுபோல உடைய என்னுமுருபு மேறக்கவேண்டுமேயென்றா ஆம அதுவுமேறகுமே அன்றியும சிலா கோட்பாட்டினபடி ஏற்புழிக்கோடலென்னுமுத்தியால அது உருபொன்று மாத்திரமென்றுகொண்டாலும தவறென்ன அப்படி மறுபாஷைகளிலும வழங்குகிறது அதுவுங்காட்டுவேன இங்கிலீசிலும தமிழில் ஆறுமவேற்றுமையாகிய சம்பந்தவேற்றுமைக்குச் சம்பந்தவேற்றுமையெனறு சொல்லப்படும (i e. possessive case) அதினுருபுகளாகிய (of and 's) என்னுமிரண்டில, of என்பது உருபாயநிறறலேயன்றி உருபேலாது 's என்பதோ உருபாய நிற்றலன்றி ஏகதேசத்திலுருபுகளுமேற்கும உதாரணம, Cottah and Sattah has each a cow but Cottah's gives 3 measures of milk at a time கொற்றனிடத்திலும சாத்தனிடத்திலும இரண்டு பசு நிற்கிறது ஆனால் கொற்றனது ஒரு நேரம் மூன்று படி பால கறக்கிறது, of these two I bought Cottah's for fifty rupees அவைகளிற் கொற்றனதை ஐம்பது ரூபாய்க்குக் கொண்டேன

இப்படித் தொல்காப்பியத்திலும நேமிநாதத்திலும நன்னூலிலும ஆறனுருபு (பெயர்த்தன்மையாய) உருபுகளேற்குமெனக் கூறியிருப்பதினாலுந் தமிழிலும் இங்கிலீசிலும அவ்வழக்கு வழங்குவதினாலும் அவ்வழக்கு விளக்கும்படி இலக்கண நூலிற் சூத்திரம் வேண்டியிருப்பதினாலும ஆறனுருபும என்னுஞ் சூத்திரம பவணந்திமுனிவர் இதைக்குறித்துச் சொன்னாரெனபதற்குஞ் சங்கரநமச்சிவாயப் புலவரவர்கள் அச்சூத்திரத்திற்கு ஆறனுருபும (பெயர்த்தன்மையாய) உருபுகளேற்குமெனச் செய்திருக்கிற வுரைசரியானதுந் திறமானதுமெனபதற்கும பெரும்பான்மையுரையைக் குறைவுரையாயக்கொள்ளாமல நிறைவுரையாகக்கொண்டவர் யாமென்பதற்கும எஞ்சுகருவெனு மலங்காரத்தால மறுதலையாய்க்கொண்டவர் பிறரெனபதற்குஞ் சந்தேகமுண்டா இவ்வளவு பெலங்கொண்டிருப்பதினாற் சங்கரநமச்சிவாயப் புலவரவர்கள் உரை சரியுந் திறமுமெனபது பூரணமாய்த் திட்டப்பட்டது மற்றையுரையுமிது போற்றிறமெனில இலக்கண விலக்கியங்களோடு சாரங்கொண்டு பேசித் திட்டப்படுத்தினாற் சித்திக்குமேயன்றி வாய்ச்சமர்த்தினால மாத்திரம பேசி ஆலாபிப்பதினாற் சித்தியாது, இவை யாவையும சத்தியவுத்தம விவேகிகள சார்ந்து கூர்ந்து ஓர்ந்து தோர்ந்து நேர்மையைச் சீர்மையாய் நிதானிக்கக்கடவர்கள்

யாழ்ப்பாணம இலங்கைநகா தில்லையம்பலவாணச் செட்டியார்
குமாரன சுவாமிநாதா

(Answer to a question on Tamil Grammar)

நியாயமற்றவிடையை நிக்கிரகித்தல

மகாகனம்பொருந்திய முகாமைப்பிரபுகாள்,

ஆறனுருபுமேற்குமவ்வுருபே, இச்சூத்திரத்திற்கு மகாகனம் பொருந்திய சிவஞானதேசிகரும், விசாகப்பெருமாளையரும் வரைந்தவுரையேயுண்மை, சங்கரநமச்சிவாயருரையுந்தின்மை, எப்படியெனனில, சங்கரநமச்சிவாயப் புலவா அச்சூத்திரத்திற்குக் கருத்துரை எய்தாததெய்துவித்தலென்றும், விருத்தியுரை இறந்தது தழீஇய விழிவுசிறப்பாய நின்றவுமமையாற் பெயர்களுருபேற்று வருவனபோல இவ்வுருபுருபேற்றுவருவது அன்றெனபது பெற்றும என்றும விளக்கமாகவரைந்திருக்கிறாரே. இம்மூவா கருத்திறகுமொப்பமுடியத் தமிழ்ப்புலவா வேதகிரிமுதலியா விடையெழுதியிருக்க இந்நாலவருக்கு மாறுக நல்லூர் சுவாமிநாதர் உதயதாரகை இரண்டிலக்கம் நிறைந்த [illegible] யோசனம? இலக்கணத் தராசெ॰ றதும பயனின்மையாகவிருக்குமோ? ணைடிலம ஆறனுருபு எட்டுருபுகளையேற்குமெனறால ஆறுமவேற்றுமைக்குரிய உருபுகளாகிய அது ஆது அ உடைய என்னும இந்நான்குருபுகளும எட்டுருபுகளையேற்கவேண்டுமே, ஒனேலாமனிறதென்றன, ஏலாமையினாலேதான எழுவாயாக நின்றபெயா ஒன்னையுருபுகளையேற்குமெ॰ று வற்புறுத்தியுரைவரைந்தாரகள்

இப்படிக்கு

சென்னைநகா சுவாமிநாதப்புலவர்.

(செயமென்றவிடையை அபசெயமாக்கல்.)

பத்திராதிபதிகளே வந்தனம

யாழ்ப்பாணம இலங்கைநகா சிறுமாணுக்கரானோர் இலக்கணவிலக்கியங்களை நன்றாய வாசிக்கவும அவைகளை எல்லாம யோசிக்கவும அவருக்குத் துதிசாற்றுகின்றனம இதனைமதியேற்றுகின்றனம ஏனெனில "இலக்கணக்கொத்தில" அருமைதோழனென்றதை உதாரணங்காட்டியும அதற்கே இலக்கண நாட்டியும இருக்கின்றது பற்றியே

இப்படிக்கு

திண்டுக்கல மதுரநாயகம்பிள்ளை

My dear Star,

I beg to know whether you have ever solicited any preacher of the Gospel to consider the awful state of some sorts of Native Christians, if not, I beg you will please improve this time, confer with them, first, about those that were christianized having reserved back their heathen wives Ask those Christians why they cannot lead their wives to obey the Gospel? Why they cannot teach them the Bible doctrine? Is it because they cannot, or because they will not? Can you point out one who is, or ever was concerned for his wife's salvation? Tell them that their prayers will be of little consequence in the judgment day Suppose their wives do not condescend, as they say, to follow Christ But will it be expedient for them to conduct their wives to heathen festivals, offering as an excuse that they went to guard the jewels which their wives wore without their permission? Why shou'd they show

their gestures within the veil? They may fairly show who they are. But why do they use this artifice? Please get an answer to this.

The second sort of Christians are those, who, after a long profession of Christianity, have married heathen wives. True they are still Christians as they were. But why have they not brought their wives to Christian light? Tell them that it is not enough for them to hinder their wives going to heathen festivals, &c. they should also bring them out as open Christians. Please go first to these two sorts of Christians and admonish them, and then complain of them to the preachers.

I am yours,

Batticotta August 26th 1842. *A Lover of the Faith.*

என்னருமைத்தாரகையே,

நீ எப்போவாகுதல் யாதொரு சுவிசேஷபோதகனிடத்திற் போய் இவ்வூரிலுள்ள சில பேதமான கிறிஸ்தவர்களுடைய பயங்கர நிலைபரத்தைக் குறித்துச் சிந்திக்கும்படி கேட்டுக்கொண்டாயா? இல்லாதிருந்தால் இப்போ அப்படிச்செய். முதன் முதல் அஞ்ஞானப் பெண்களையுடைய கிறிஸ்தவர்களைக் குறித்துச் சொல்லு. சுவிசேஷ வழியிலேன் அவர்களை நடத்தக்கூடாதாம்? ஏன் அதின் போதனைகளைப் படிப்பிக்கக்கூடாதாம்? கூடாதாமோ பிரியமில்லையாமோ? தனது அஞ்ஞானப் பெண்சாதி மனந்திரும்பவேண்டுமென்று விரும்புகிற ஒரு கிறிஸ்தவனைக் கண்டுபிடி. அவர்கள் பண்ணுகிற செபங்களைக் கடைசிநாளிலே சின்னதாயிருக்குமென்று நினைக்கிறார்கள்போல மனந்திரும்ப அவர்களுக்குப் பிரியமில்லையென்பார்களோ, அப்படியானால் அஞ்ஞானக் கோவில்களுக்குப் போகப் பூஜைரங்களைத் தேடிக்கொடுக்கிறார்களாம்? மொட்டாக்குச் குள்ளே கையென்ன காட்டுகிறார்களாம். வெளிவெளியாய் வரலாமே அதற்கு யாதொரு தண்டமாமோ? பணமோ நரகக்கடையோ! அப்படிச்சொல்லுகில இந்தக்கூத்தெல்லாமேனும்? இதற்கு மறுமொழி கண்டுபிடி.

சாஸ்திரப்பள்ளியிற் படித்துக் கிறிஸ்தவர்களாகிப் பின்னஞ்ஞானப் பெண்களைக் கலியாணம் முடித்தவர்களெப்படிப்பட்டவர்கள்? சரிதான் அவர்கள் முன்போலே மெய்க்கிறிஸ்தவர்கள் அவர்கள் பெண்சாதிமாரேன் சுவிசேஷங் கேட்கவருகிறதில்லையோ? அஞ்ஞானக் கோவில்களுக்குப் போகாதிருந்தால் மாத்திரம்போதுமா அல்லவென்று சொல்லு? தமிழக்கிரியைகளைத் தள்ளிவிட்டால் மாத்திரம்போதாதென்று சொல்லு சமையமிதுதானென்று வரச்சொல்லு. நீ போய் இவ்விருதிறத்தாரையுங் கண்டுபேசு அதன்மேற் போதகரிடத்துக்குப் போய் அவர்களுக்காகப் பரிந்து பேசு.

இப்படிக்கு உன்னேசன்,

வட்டுக்கோட்டை ௲அ௱௪௨. ஆண்டு } சுவிசேஷப்பிரியன்
ஆவணிமீ. உ௬தி.

To the Editors of the Morning Star.

I beg you to introduce the following query to the minds of all inquisitive readers through the medium of your most valuable Star.

As Her Majesty the Queen VICTORIA had her young Prince and Princess baptized with the water of the river Jordan, I am led to infer that no such holy water could be procured in and around the continent of Europe and the adjacent islands as that of the river Jordan, and that ceremonial laws are still preserved as well among the Protestants as the Hindus, and consequently to contradict the doctrines of the ministers of the Gospel in admonishing the Hindus for their appreciating the excellence of the sacred waters of certain sacred rivers of certain sacred places.

Yours P. N.

Point Pedro Aug. 1842.

We do not wonder that some of our native readers, who have been instructed in Christianity, should be surprised to read that the water of the Jordan was used for the baptism of the young Prince of Wales. It need not be supposed, however, that any of the parties interested in the ceremony alluded to, attached any peculiar virtue to the water of the Jordan. It was not deemed in any wise *essential* to the ordinance, and on the other hand, it was just as good for the purpose as any other water and no better. A pious mind might find pleasure in the *association* that this water was from the river where Christ was baptized, and the indulgence of such a feeling is quite innocent, but no one who rightly understands the Bible could attach any such virtue to the water of the Jordan as the heathen do to the water of the Ganges, or, as the Catholics do to the water which some of their priests profanely profess to have consecrated so that it will impart a *holy influence*

துரைகளே,

இங்கிலாந்துமுதலான சீமைகளுக்கரசியான மகா கனம்பொருந்திய விக்ரோறியா தமபுத்திரனுக்கும் புத்திரிக்கும் வெகு பணஞ் செலவிட்டு யோர்தான் நதியிற்றீர்த்தமொள்ளுவித்து ஞானஸ்னானஞ் செய்வித்ததினால் ஐரோப்பாக்கண்டத்தினுட்டேசங்களிலும் அதைச் சூழ நின்ற தேசங்களிலுமதைப் போன்ற தீர்த்தமில்லையென்றும், தீர்த்த மகிமையுண்டென்றும் விளங்குகின்றது. இன்னுமிருக்கக் கிறிஸ்துமத ஆசாரிகள் தீர்த்த மகிமையில்லையென்று உபதேசிப்பது மாறுபாடாய்த் தோன்றுகின்றது, இதற்குத்தரஞ் சொல்ல உங்களை மன்றாடுகிறேன்.

இப்படிக்கு

பருத்தித்துறை இங். பள்ளிக்கூடம், பெற்றுர் நரசிங்கம்.

பத்திராதிபர் குறிப்பு.

எங்கள் அதியுத்தம இராணியவர்களின் புத்திரனுக்கு யோர்தான் நதியிற் றீர்த்தத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டதென்பதைப்பற்றி வாசிக்கும்பொழுது எங்களூர்ப்பிறந்த சினேகிதர்கள் மலைப்புக்கொள்வதை நாம் காண்பது நமக்காச்சரியமல்ல அல்லவென்று, மேற்சொல்லிய இராணிபுத்திர ஞானஸ்நானக்கிரியாங்கத்துக்குடந்தையாயிருந்த யாரெனினும் யோர்தானதியிற்றண்ணீரிலே யாதொருமேன்மையிருக்குதென்றெண்ணினார்களென்றதாகவும் நாம் நினைக்கவில்லை. அந்நதியிற்றண்ணீர் அப்படிப்பட்ட கிரியாங்கத்துக்குச் சற்றேனுமவசியமாயிருந்ததாகவுங் காணவில்லை.

இன்னுமற்று நீரைப்போல அந்நதியினீருங் காரியத்துக்குக்கூடிய அளவு நல்லதாயிருக்கின்றது. ஆயினுமந்நீரிற் கொஞ்சமேனுமேன்மையில்லவெயில்லை அப்படிப்போயினும், கிறிஸ்துநாதர் ஞானஸ்நானம்பெற்ற நதியின் (யோர்தான்) தண்ணீரிதுதானென்ற ஒற்றுமையைக் காணும்பொழுது தெய்வபத்தியுள்ள ஒருவன் சந்தோஷங்கொள்ளக்கூடும். அப்படிக்கொள்ளுஞ்சந்தோஷத்திலே யாதொருதப்புமில்லை.

அஞ்ஞானிகள் கங்காநதியின் சலமதிகமேன்மையுள்ளதென்றெண்ணுகிறதற்குச் சரியாக றோமான் கத்தோலிக்கருந் தங்கள் குருமாரிற் சிலர் தண்ணீரை அபிமந்திரித்தாகளென வீணுய்ச்சொல்வதுபோல, வேதாகமத்தைச் சரிவர விளங்கிக்கொள்பவர்களுண்டானால் அவர்கள் யோர்தானதியிற் சலத்தில யாதொருமேன்மையிருக்குதென்றெண்ணமாட்டார்கள்.

[A query in Mathematics.]

இலாடசங்கிலிதத்திலோர் வினு

மனவிருணீக்கி மகாவறிவெமக்கருண்- நீ நீ மைனர்த் துரையவர்களுக்கு வந்தனம்.

ஏரேறுமாது வளாதாரணிப்பிறவுடிகனிகைமிகுவாகைபுனைவோனேழுலகுளோர்பரவவாழுமகாராசதுரையெண்டிசையும மண்டுபுகழோன - சீரேறுநன்றிவென்றி சேரோர்குரிசிறிருமேவுசவியுதவவே- திரட்டரளமணிநூறிலாடசங்கிலித விலைசெறிபொருள்களுபங்கே- காரேறுமோருவர் பங்காறேழுக்காலொருவர கருதுமைந்தொடுகாலுமே-கவினுலாமொருவர்பங்கொரு நாலொட்டரையொருவர்காணுமேழரையுமிதுவே—வாரேறுசங்கிலிதவகைமுதல பெருக்குவகைமாசிலாப்பங்குவகையே-மாகாபெருமுகாலைமயொருச்சிதமெய்ச்சுமிசைவைத்து மிகுசித்தமருளே

இப்படிக்கு

௲அ௱௪௨ம் ஆண்டு ஆடிமீ ௩௧தி } கணிதவிநோதன்
யாழ்ப்பாணம் மயிலங்கா

இதயவிருணிக்குமுதயதாரகையினுத்தம பிரபுக்களாகிய கனம்பொருந்திய முகாமைக்காரரே,

வானகந்தருமிசையவாயின
வானகந்தருமிசையவாயின
வானகந்தருமிசையவாயின
வானகந்தருமிசையவாயின—க.

மாதானுமாதானு
மாதானுமாதானு
மாதானுமாதானு
மாதானுமாதானும்—உ.

இவ்விரண்டு ஏகபாதசெய்யுளின் பொருளென் சிற்றறிவுக்கு விளங்ாமையாற் தாங்கள் தயவுசெய்து இவைகளைத் தங்கள் கனம் பொருந்திய தாரகையிற் பிரசுரஞ்செய்து கற்றுணர்ந்த வல்லோரிதற்கெழுதும் பொருளையுமதினாலறிவிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன இப்படிக்கு

௲அ௱௪௰௨ ஆடி௴ ௨௩ தி
நீர்வேலி
கதிரித்தம்பியாபிள்ளை, சுதன இராமலிங்கம்பிள்ளை

காகிதப்பிரத்தியுத்தரம்.

(Answers to Correspondents)

"சைவசமயிகளாகிய எங்களை நீங்களும் உங்களை அடுத்தவர்களும் ஏன் அஞ்ஞானிகளென்றழைக்கிறீர்களென்றும், அஞ்ஞானிகளென்பதற்கருத்தமென்ன" வென்றுமொருவர் கேட்கிறார். அதற்கர்த்தமென்னவெனில், சத்திய தெய்வ வறிவின்மையுடையவர்களே அஞ்ஞானிகள் சிவனென்பவர் ஒரு பொய்த்தேவனாய் அல்லது பசாசாயிருக்கின்றமையால, அப்படிப்பட்டவருக் கருச்சனை செய்கிறவர்கள் சத்தியபரனைப்பற்றிச்சற்றேனுகிலும உணர்த்தியற்றவர்களும், அவருடைய பரிசுத்தநாமத்தைக் கொலைச்சலபணணுகிறவர்களுமாயிருக்கிறபடியாற் சைவசமயிகளை அஞ்ஞானிகளென்றழைக்கிறோம்.

நீர்கொழும்பு "க. மதாற்சாய்வு" அவர்கள் வரவிடுத்த கடிதத்தை அச்சடித்துப் பிரசுரஞ்செய்வதில யாதொரு பயனுமவராதென்ற நியாயத்தைததொட்டு அத்தை அச்சிற்பதியாமல விடுகிறோம

நாகபட்டினம, கோவிந்தப்பனுயுடு அவர்கள் இரவிற்சொலலிய அருபிக்கதையை இங்கிலீசிலுந் தமிழிலும அச்சடிப்பித்துப் பிரபலஞ் செய்யவேணடுமென்ற கேள்விப்படிசெய்ய இவ்வருடத்திலாரமபிக்கிறது கூடாதகாரியம், ஒருவேளை அடுத்தவருடத்திலத்தை அச்சடித்துப் பிரசுரஞ்செய்வோம.

புதினசங்கதிகள்.

முகாமைத்துரையவர்களுக்குச் சந்ததம வந்தனம.

நீர்கொழும்புப் பெரியதெருமரிய அற்புத நாயகியின் கோவிலுக்குத் தேவையாக, ௲அ௱௨௰ ஆனி மாதம ௨௰ தெயதி ஒர்கருஞாச்சங்கமொன்றுஸ்தாபித்துககுறித்தசங்கமிபபோ வரவரஅதிகஸ்திரப்பட்டு வருவதைக்கண்டேன அது சிற்றறிவுக்கு மிகுந்தகனவிருபப உல்லாச மனச் சந்தோஷங்கொண்ட விஷயமாயிற்றுதெனக.

மதுரை

காற்றின் சகாயன்—கொஞ்ச நாளைக்கு முன்னே அதாவது, ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை மதுரைப பதியில (௨௱) வீடுகளுக்கதிகமாக எரிந்துபோயிற்று எபபடியென்றால், அந்தப பட்டினத்துக்கு நடுவே கட்டியிருந்த ஒரு துலுக்கனுடைய வீட்டில முனனம் பற்றி இரண்டு மணித்தியாலத்துககு அதிகமாக வேகித்தாரம்பித்துககொண்டு நின்றது இபபடி எரிந்தும பிரதானமான கட்டுவேலைகள் ஒன்றும எரிந்துபோகவிலலை மெத்தப பிரயாசத்தினால மெஸ்தர் விளாய்க்குவேன கலக்கட்டரவர்களுடைய கச்சேரி எரியாமல தபபிப்போயிற்று.

இவைகளைவிட இன்னுமொரு கடையும அதற்குள் வைத்திருந்த தானியங்களும அக்கினிக்கிரையாயபபோயிற்று. சில பிள்ளைகளும நெருப்பிலகபபட்டிறந்துபோனார்களென்றுங் கேள்விபபடுகிறோம் இப்படியெரியுமபொழுது, அக்கினியின சகாயனாகிய வாயுவும அந்தவேளையிலே மும்முரமாயடித்தாரமபித்து எரிந்த நெருப்புகளை வாரியள்ளிககொணடுபோய அகனிகளிற்போட்டுவிட்டதாகக கேள்வியானோம.

சீனம்.

சீனதேசத்தைச் சார்ந்த சாப்பு (Chappoo) என்ற நகரியை இங்கிலீஸ்காரர் தங்கள் வசமாக்கிககொணடாரகளென்ற செயதியைப் பிறகிட்ட வைகாசி ௴ ௨௨ தி. சாப்புவிலிருந்தெழுதி வரவிடுத்த கடிதங்களினால அறிந்துகொண்டோம எபபடியெனில, இங்கிலீஸ்காரர் வளத்தைச் சார்ந்த இரணரங்கவீரர்களனைவரும ஒருமிக்கச் சமுத்திரம்பேரில ஆரம்பித்து, வைகாசி ௴ ௰௭ தி. அளவிற் சாபபு நகரியிற் கிட்டிப் பிறகு, ௰௮ தி. காலமே ௮. மணிபோலத் துடுப்புகளெல்லாங் கப்பலை விட்டுக் கரைக்கிறங்கி, அதிசீக்கிரமாகச் சீனருககுத் துடுப்புகளாயிருந்த தாத்தார்களு (Tartars) டன் சண்டை செய்தபொழுது, அவர்களும் அதிக தயிரிய வீரபராக்கிரமத்துடனுயுத்தஞ்செய்து ஒருவரை ஒருவர் கெலிக்கக்கூடாததினாற் கடைசியாக நாங்கள் கோட்டுப் பீரங்கியை விட்டுத் தாத்தார்களையும் மடங்கடித்துப் பின்னிட்டு மூறிந்தோடச் செய்தோம் இப்படிச் செய்தவேளையில இங்கிலீஸ்பக்கத்தில (௰௮)ம துடுப்புகளுத் தளகர்த்த உத்தியோகத்தை நடப்பித்திருந்த தோமலின்சன (Tomlinson) எனபவரும, இன்னுமப் பட்டாளத்தைச் சார்ந்த மறையெனபவரும, (Murray) கொட்டிறல (Goddrel) எனபவரும் இவயுத்ததினுயிரிழந்து நாசமபோனார்கள் இன்னுமிப பட்டாளத்தில இங்கிலீஸ்காரர் வளத்தில மடிந்தவர்களுங காயபபட்டவர்களுமேறக்குறைய (௯௬) பேர் இதைவிட வேறு ஒருபடைத்தலைவனுந் தன் அவயவத்தின மூன்றிடத்திற் காயபபட்டார் ௫௫ம பட்டாளத்தை நடபபித்தணிவகுத்த கம்பல (Campbell) என்பவரும் தலையிலே ஒரு துவக்கினுற குண்டுவாங்கிக்கொணடார் இவர் ௨௨ தி. அளவிலே சாவவேதுவாய்ப பிறகுசற்றே முளித்துப பேசத்தக்கவராயிருந்தார் இன்னும் இங்கிலீஸ்காரருடைய (௪௯)ம பட்டாளத்தில மடிந்தவர்களுங காயப்பட்டவர்களும் ஏறக்குறைய (௨௭) பேர் கற்பித்தான (Reynolds) றெனோலட்ஸ எனபவரும் லெவ்விற்றினன்று (Brown) பிரவுன எனபவருமபாடான காயம் வாங்கிகொண்டார்கள் ஆகிலும (௫௫)ம பட்டாளத்திற் சேர்ந்தவர்கள் மற்றும் பட்டாளத்தைப்பார்ககிலும போரில் மெத்த முயாச்சியாய் அன்றைககு நிலவாதபடியினாலேதான இதைச் சேர்ந்த ஒருவரெனகிலும நாசமோசமாயப போனதிலலை இபபடித் தப்பிக்கொணடாலும வேறொரு வழியாய் இவர்கள் மோசமடையவேதுவாய்வந்துபோகப்படடது எப்படியெனில, இந்த (௫௫)ம பட்டாளத்திற் சனங்கள் பதிவிருந்த சீனரைச் சயிக்குமபடி மலையடிவாரத்தைச் சுற்றிககொணடு போகையில, சீனர் அவர்களிற படுமபடி அநேகவித குண்டுகளை விடடு ஒருவர்க்குமபடாமல அவர்கள் நின்ற இடத்துககடுடே விழுந்தன இதைப பற்றி ஒருவர் எழுதுகிறதாவது, "சீனர் இஙகிலீஸ்காரரில விடட குண்டுகளிலொன்று ஒரு வயலுககுள்ளே விழுந்தது அந்த வயலமண் மிருதுவுஞ் சேறுமாயிருந்தபடியால அந்தக் குணடு நிலத்தில விழுந்து வெடிக்க முனனே ஆறிப்போயிற்று. [illegible] த (௫௫) பட்டாளத்தில அரைவாசிப்பேரும நானும வேறொருவ பிசரும நாசமாயபபோவோமெனபதற்குச் சற்றேனுகிலுஞ் சநதேகமிலலை நாங்கள் அன்றைககேதுவாயிருந்த மோசம நாஙகளடைந்த எலலாவற்றிலும பெரிய மோசமென்று நினைத்தோம"

இங்கிலீஸ்காரர் தங்கள் வசமாக்கிக்கொண்ட இந்தச் சாபபு என்ற படடினம் நாலாவிதத்தினாலும மெத்தச் செழிப்பும அலங்காரமுள்ளதாயிருக்கின்றதுமன்றிப் பட்டுநூல ஆற்கு மரஙகளும பலவிதமான எலுமிச்சை மரஙகளும், முந்திரிகைத்தோப்புகளும, வேறும பலவித மரப புரோசனஙகளுமஙகே உணடு. இவைகளைவிட எணணடங்காச் சேலையான படைக்கலஙகள முதலிய ஆயுதங்களுமங்கேயுணடு தாத்தார் சீனதேசத்தை வளைந்துசூழக் கட்டியிருக்கு மதிலுக்கு மறுவளத்தில வாசம்பண்ணுகிறார்கள். இவர்களுடைய கிராமத்தைப் பார்த்தால ஒரு வெளியிலே சிப்பாசிமார் ஒரு வரிசையாய அலலது வயிறுய நிற்கிறதுபோலக் கண்ணுககுத தோற்றும இவர்களிருககுமொவவொரு வீட்டிலும குண்டு மருந்து சனனமெனனும் படைத்தளபாடங்களிருககும

சாபபுநகரி இஙகிலீஸ்காரருககுள் விழுந்த பிறகு அதிலிருந்த தாத்தார்களுடைய நிலையைப் பார்ககுமபொழுது மெத்தப் பரிதபித்துருகத்தககதாயிருந்தது எப்படியெனில, இதைப் பற்றி ஒருவர் சொலலுகிறதாவது, "நான சில வீடுகளுககுட் குனிந்து பார்ககுமபொழுது, மெத்தப பயஙகரமாயிருந்தது. ஏனெனில, இரண்டு கிழவிகள அவ்வ யதார்த்தத்தையுட்கொண்டதினாலே அவர்களுடகார்ந்திருந்த நாற்காலியிலேதானே சாகவேதுவாயக் கிடந்தாகள். இதை விட வேறொரு மூலையையும பார்த்தேன, அதிலும ஒரு கிழவன அவின வெறியினாற் சாககிடந்தான வேறொருஸ்திரியுங் கழுத்தில நரம்பறுபபட்டுச் சாககிடந்தாள். இன்னுஞ் சவுந்தரிகமுள்ள வேறொரு கனனியுஞ்சாக இருப்பாளோ பிள்ளையோவென்று கிடந்துளனருள் ஏனெனறால இஙகிலீஸ்காரருடைய கரங்களில விழுந்து மடிந்து நாசமாய்பபோவதிலும மறுவிதமாயச் சாவது நலமெனறெணணிச் சில பெற்றார் தஙகடஙகள் பிள்ளைகளைக் கட்டிக் கிணற்றிலேபோட்டார்கள் இபபடிப்பட்ட அநேகம பிள்ளைகளையும் இளம்பெண்களையுஞ் சாவாமற் காத்திர

ட்சித்தோம். அந்தச் சிறுவர்கள் நாங்கள் அவர்களுக்குச் செய்த நன்றியை இன்னதென்றறியாதவர்களாயிருந்தார்கள் நாங்கள் தாத்தாருடைய கரங்களிலகப்பட்டாலெங்களுக்கவர்களெவ்வித செய்கையைச் செய்வார்களோ அப்படியே நாங்களுஞ் செய்வோமென்றதாகவெண்ணியிருந்தார்கள். தாத்தர்கள் சுபாபத்திலே மெத்தத் துடியர்களாயிருக்கிறார்கள். இதற்குதாரணமாக, இங்கிலீஸ்காரருடைய (௰அ)ம் பட்டாளத்தை அடுத்த ஒருவன அவர்கள் கையில அகபபட்டதினுலே அவாகள் அவனுடைய முகங்களைக் கிழித்து நாக்கையுங் கண்ணையும் வெட்டி அவயவத்தையும் பாாக்ககூடாதவிதமாய்க் கங்குகங்குகாகக் கிழித்துபபோட்டாாகள். இவைகளனைத்தையும் நாங்கள் கண்டு நாங்களும் அவர்களிடத்தில அகப்பட்டாலெங்கள் பாடு எனனவாயிருக்குமெனறு துலாம்பரமாயறிந்துகொண்டோம.

வைகாசிமீ. உ௯ தீ. அளவிலொருவரெழுதியனுப்பினதாவது, "எங்களிடத்திலகப்பட்ட (௬௭) மறியற்காரரையும் காயப்பட்டவர்களிற் (௰௬) பேரையுமினறைக்கு நான் காவற்பண்ணிக்கொணடிருந்தேன. இபபதினெருபேரிவிரண்டுபோ சற்றே சாதிசனத்திலுள்ளவர்கள் அவர்களிலொருவன ஒரு துடுப்புகளுக்கு முதலாளியாயிருந்தான மற்றவன பதினுறு வயசுபபராயமுள்ளவன. இவனுக்குப்பாடான காயமபட்டுக்கிடந்தது. இவன முடிவுமட்டுஞ் சாவத்தக்கனையாய்ச் சண்டைசெய்தான் நான் அவனிலே இரக்கங்கொண்டபடியால், அவனைப் பலமுறையும் போய்க் கண்டு பேசிவருகிறேன். மறியற்காரருக்கு நாங்கள் செய்துவருந் தயையை அவாகளென்னவிதமாய் எணணி வருகிறாாகளெனபதெங்களுக்குத் தெரியாது. அவாகள் காத்திருந்ததிலும வித்தியாசமான விதமாய் நடத்தப்படுகிறார்கள் இனறைக்குச் சீன மஸ்திருத்தைச் சாாந்த ஒருவன் சமாதானக்கொடியும பிடித்துக்கொணடு இங்கிலீஸ்காரரிருந்த பாளயத்துக்கு வந்து சீனராசன இங்கிலீஸ்த்தளகர்த்தருடனே சம்பாஷணைபண்ணி அவாகளுடனேதுவிதமுஞ் சமாதானம்பண்ணிககொள்ள எண்ணியிருக்கிறதாகவும் அறிகிறோம. இபபடிவந்ததென்னத்துக்கெனறுல, சீனருடைய பிரதான கிராமமாகிய (Hang Chappoo) காங்குசுப்பு என்றதைப் பிடித்துக்கொள்வாாகளெனறு சீனராசாக்கள் திகிலகொணடபடியினுற்றுன் கற்பித்தான கமபலெனபவருஞ் சாகபபிழைக்கக் கிடக்கிறார்

நமது இராணியவர்கள் தற்காக்கப்பட்டதின் நிமித்தம் கத்தாவுக்குச் செலுத்தப்பட்ட துதி.

இந்தப் பிரசித்தபத்திரம் பெற்றுக்கொண்ட முதலாம் இரண்டாம ஓயவுநாட்களிலே தமது பராபரிப்புக்குக்கீழான சபைகளிற் செலுத்தபபடும்படியாகச் சென்னபட்டினத்திலிருக்கும மேலான விசுப்பு (Lord Bishop) அவர்களாற் கற்பிககப்பட்ட தோத்திரம்

சருவவல்லமையுள்ள நித்திய கத்தாவே, உலகத்தைப்படைத்தாள்பவரே, பொலலாதவர்கள் தங்களுடைய வன்மத்தினுற் செயய நினைக்குந் தீமைகளை அபத்தமாகவ அவர்களிலிருந்து உமமாற் தெரிந்துகொள்ளப்பட்ட உமது ஊழியகாரரையும் தேவரீர் எங்களுக்கென்று தெரிந்துவைத்த (Lady Queen Victoria) என்ற இராணியையும துரோகிகளுடைய கைககு நீங்கலாகவ விடுவித்ததினிமித்தம நாங்கள் உமககு மிகுந்த வழிபாடான விணணபபஞ் செலுத்துகிறோம் ஆ! இரக்கமுள்ள ஆண்டவனே, எங்களைக் காப்பாற்றி நமது இராணியவர்களுக்கு இரகசியமாயும வெளியரங்கமாயும செயய நினைத்த சதியோசனைகளுககாகத் தேவரீர் அவளுக்கொரு கேடகமாகவும், புகலிடமாகவும அவளுடைய நாயகனாகிய அதிபதிக்கும் மற்ற அவ்வரண்மனையைச் சோந்தவாகளையும தற்காத்து அவாகள் தேவரீரபேரிலே அதிக நமபிகைக வைககவும இராசசியபாரத்தின குடிசனஙகளுககு நன்மை பரிபாலிககவும தேவரீருடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகுமபடிக்கு உமது பரிசுத்த ஆவி அவளைக் காபபாற்றி வழிநடத்துமபடிக்கருளும ஆ! இரக்கமுள்ளபிதாவே, உமது திருச்செவியைச் சாய்த்து எஙகள இரட்சகருமமீடபருமாகிய யேசுகிறிஸ்துவின நிமித்தம எஙகள் விண்ணபபங்களைக் கேட்டு அனுக்கிரகிககவேண்டுமெனறு உம்மைப் பிராத்திக்கிறோம் ஆமென.

உடையாககள் காணிக்குப் பட்டோலை கொடுத்துச் சலார் வாங்குவதைப் பற்றி நிருபித்த கட்டளைச்சட்டம்

க. யாதொருவா தமது காணியைப் பற்றித் தலைமைக்காரரிடத்திற் பட்டோலை கேட்குமபொழுது, அந்தத் தலைமைக்காரர் அவர்கள் கேள்வியின்படி பட்டோலை கொடுத்து அந்தக் காணியின் விலைபோல நூற்றுக்கிரண்டுமாத்திரஞ் சலார் வாங்கவேண்டுமென்றும, அப்படி வாங்குமபொழுது எப்படிப்பட்ட காணிக்கும் (க) சிலிங்கு (௬) பேனிஸ்ககுக் கீழ்ப்படவும, (௫) பவுனுக்கு மேற்படவும் வாங்கப்படாதெனறும, கொடுக்கும பட்டோலைக்குத் தங்கள் கையொப்பத்தை வைத்து மறறுமுணடான பிசுகுகளைத் தீர்த்தாலேயனறி அவாகளுக்குக் குறித்த சலாா கொடுக்கப்படாதெனறும்,

உ. அப்படி ஆராகுதல காணிக்குப் பட்டோலை தருமபடி கேட்குமபொழுது, அந்தக் காணி பட்டோலை கேட்டவாகளுடைய நிசமான யாட்சியலலவென்று தலைமைக்காரர் போதிய அத்தாட்சியுடன அறியவநதால, அவர்கள் குறித்துக் கேட்ட காணிககுப் பட்டோலை கொடாமலவிடுவதுமனறி அப்படித் தாஙகள் கொடாமல் விடும் நியாயத்தையுமுடன் எழுதிப் பட்டோலை கேட்டவர்களிடத்திற் கொடுத்துபபோடவேணடுமெனறும,

